[3rd November 1958

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த ராஜ்யத்தில் மொத்தம் லட்சத்து முப்பத்தோராயிம் ஏக்கர்தான 1956–57ல் மூன்றும் போகம் சாகுபடி செய்யப்பட்டிருப்பதாகக் காணப்பட்டிருக்கிறது. அதில் திருநெல்வேலி ஜில்லாவில் 2,500 ஏக்கர்தான் செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சனை எழவில்லை.

SRI A. VEDARATHNAM : தஞ்சை ஜில்லாவில் மூன்றும் போக சாகுபடி எல்லா இடத்திலும் செய்யப்பட்டதா?. அதன் பயன் என்ன? திருப்திகரமாக இருந்தால் இந்த ஆண்டும் அவ்வாறு அனுமதி அளிக்கப்படுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தஞ்சை ஜில்லாவில் 1957–58–ல் 6,516 ஏக்கர்கள்தான் மூன்றும் போகம் சாகுபடி செய்யப்படுகிறது. இன்னும் அதிகம் செய்திருக்கலாம். சில விவசாயிகள் அந்த வசதியைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. பயன்படுத்திக்கொண்ட விவசாயிகளுக்கு நல்ல பயன் ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு இருக்கும் தண்ணீர் நிலைமையை ஒட்டித்தான் மூன்றும் போக சாகுபடியை அனுமதிக்காலாமா, இல்லையா என்று தீர்மானிக்கப்படும்.

SRI M. C. MUTHUKUMARASWAMY : தஞ்சை ஜில்லாவில் எத்தனை பேர் மூன்றும் போகம் சாகுபடி செய்யத் தயாராய் இருக்கிறார்கள் என்கிற பட்டியலை தயார் செய்துகொண்டு தண்ணீர் விட்டார்களா ? பயன் படுத்திக்கொள்ளுபவர்கள் கொள்ளட்டும் என்று தண்ணீர் விட்டார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது சம்பந்தமாகக் கலெக்டர் ஒரு மகாநாட்டைக்கூட்டி எல்லா விவசாயிகளுக்கும் விளக்கிச் சொல்லி எவ்வளவு பேர் சாகுபடிசெய்ய வருவார்கள், எவ்வளவு தூரம் தண்ணீர் விட வேண்டும் என்பது தெரிந்தே தண்ணீர் விடப்பட்டது.

Murder cases

* 798 *Q.*—SRI S. M. ANNAMALAI : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1957–58–ல் எத்தனை கொலைகள் சம்பந்தமாக போலீசில் எத்தனை கேஸ்கள் பதிவு செய்யப்பட்டன ?

(ஆ) எத்தனை குற்றப்பத்திரிகைகள் தாக்கல் செய்யப்பட்டன?

(இ) எத்தனை கேஸ்கள் தண்டனையில் முடிந்தன?

(ஈ) எத்தனை கேஸ்கள் நீதி மன்றத்தில் முடிவு பெறுமல் உள்ளன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 792.

(*b*) 667.

(*c*) 339.

(*d*) 149.

SRI S. M. ANNAMALAI : இவற்றில் கட்சித் தகராறுகளினால் ஏற்பட்ட கொலைகள் எவ்வளவு? காதல் தகராறுகளினால் ஏற்பட்ட கொலைகள் எவ்வளவு என்று சொல்ல முடியுமா?

THE HON. SRI M. BHAKTHAVATSALAM : எந்தெந்தக் காரணத்தினால் கொலை நடக்கிறது என்று முன்பு கேள்விக்குத் தெரிவித்திருக்கிறேன். இப்போது அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

Wool

* 799 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) மாடுகள், ஆடுகளிலிருந்து ரோமங்கள் எடுக்கும் தொழிலானது எந்தெந்த ஜில்லாக்களிலே நடைபெற்று வருகின்றன?

3rd November 1958]

(ஆ) 1957, 1958–ம் வருஷங்களில் எத்தனை ரூபாய்கள் மதிப்புள்ள ரோமங்கள் எந்தெந்த தேசங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன?

(இ) சேலம், திருச்சிராப்பள்ளி, நீலகிரி ஜில்லாக்களிலே எந்தெந்த இடங்களில் கம்பளி நெசவு தொழில் பயிற்சிகள் (Cumbly weaving training cum Demonstration Centre) ஏற்பட்டிருக்கின்றன ?

(ஈ) 1957–58 ஆண்டுகளிலே இப்பயிற்சி நிலையங்களில் எத்தனை பேர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்பட்டன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The industry is being carried on in Tiruchirappalli, Salem, South Arcot and the Nilgiris districts.

(*b*)

	1957.	1958- (During the monthss of January and February.
	RS.	RS.
United Kingdom	2,384	—
Germany (West)	5,73,506	31,102
Netherlands	20,040	17,454
France	19,390	—
Total ..	6,15,320	48,556

Particulars from March to August 1958 are not readily available.

(*c*) Training-*cum*-production centres for cumbly weaving have been started at—

Puliyankurichi and Mekalachinnapalli, Salem district.

Kolakudi, Tiruchirappalli district.

Kookalathurai, Nilgiris district.

(*d*)

	1957–58
Puliyankurichi, Salem district	5
Mekalachinnampalli, Salem district ...	10
Kolakudy, Tiruchirappalli district	12
Kookalathurai, Nilgiris district	8
Total ...	35

SRI P. G. MANICKAM : நமது மாகாணத்திலே பயிற்சிச்சாலைகள் மாத்திரம் இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்தி வெளி நாட்டிலிருந்து கம்பளமாக இறக்குமதி செய்யாமல் இங்கேயே கம்பளம் உற்பத்தி செய்வதற்கு சர்க்கார் முயற்சி எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : வட ஆற்காடு ஜில்லாவில் விண்ணமங்கலம் கிராமத்தில் பதின்மூன்று லட்சத்து பத்தாயிரத்து ஐம்பது ரூபாயில் ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுகிறது. சென்னை அரசாங்கமும், மைசூர் அரசாங்கமும் சேர்ந்து இதை நடத்தும்.

[3rd November 1958

SRI J. MATHA GOWDER : நீலகிரி ஜில்லாவில் நடைபெறும் புங்கனூர் கம்பளி தொழிற்சாலைக்கு வேண்டிய சாமான்கள் கொடுக்கப்படவில்லை என்பது சர்க்காருக்குத் தெரியவந்திருக்கிறதா ? அப்படியானால் அதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTHAVATSALAM : அதைப் பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை. கனம் அங்கத்தினர் என்னிடத்தில் வந்து அந்த விவரங்களை எல்லாம் தெரிவித்தால் அதற்கு வேண்டிய கவனம் செலுத்தலாம்.

Checking of motor vehicles at Alumpannai

* 800 Q.—SRI M. S. SELVARAJAN : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி ஜில்லா, ஆலும்பண்ணையில் ராஜ்யம் பிரிவினைக்கு முன் இருந்ததைப்போல போலீஸார் மோட்டார் வண்டிகளைப் பரிசோதனை செய்து அனுப்பினார்களா?

(ஆ) அப்படியானால் அதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) There is no place as Alumpannai in Kanyakumari district. It is presumed that the member is having in mind the village " Aramboli ". Buses and lorries stop at the police station in this village to sign a register maintained under the Madras Motor Vehicles Rules at the Police station. The police are not checking the vehicles there.

Medical facilities under the Plantation Labourers Act

* 801 Q.—SRI N. MARUDACHALAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

தோட்டத் தொழிலாளர் சட்டப்படி 1956 முடிவுக்குள் வைத்திய வசதி செய்து கொடுக்காத தோட்ட முதலாளிகள் மீது சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தோட்டத் தொழிலாளர் சட்டம் 1956-ம் ஆண்டு ஜனவரி முதலிலிருந்துதான் அமுலுக்குக்கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஒரு சில தோட்ட முதலாளிகளைத் தவிர மற்றெல்லோரும் வைத்திய வசதி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். இது ஒரு புது சட்டமாகையாலும் வைத்திய வசதிகள் செய்வதற்குப் பணம் தேவைப்படுவதாலும் வசதி செய்து கொடுக்காத தோட்ட முதலாளிகள் மீது எவ்வித நடவடிக்கையும் உடனே எடுக்காமல் இந்தச் சட்டப்படி செய்ய வேண்டிய வசதிகளைச் செய்யும் விஷயத்தில் தொழில் இலாகா உதவி புரிந்து வந்தது. அவர்களும் ஒரு மாதத்திற்குள் இந்த வசதிகளைச் செய்து கொடுக்கும்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

SRI N. MARUDACHALAM : சில தோட்ட முதலாளிகள் வைத்திய வசதி செய்து கொடுக்காமல் இருக்கிறார்கள். அம்மாதிரி இடங்களில் அரசாங்கமாவது வைத்திய வசதி செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : 257 தோட்டங்களில் இது வரையில் வைத்திய வசதி செய்வதற்காக 214 தோட்டங்கள் திட்டங்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள். அவை பரிசீலனையில் இருக்கின்றன. 114 தோட்டங்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுவிட்டது. தோட்டக்காரர்கள் செய்ய வேண்டிய கடமையை அரசாங்கம் ஏற்றுக்கொள்வது சரியல்ல. அவர்களைக்கொண்டே சட்டப்படி என்னென்ன வசதி செய்து கொடுக்கவேண்டுமோ அவற்றைச் செய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது.